**செய்தி வெளியீடு எண் : 1447** **நாள் : 23.08.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற காலணிகள் மற்றும் தோல் துறை மாநாட்டில் 2,250 கோடி ரூபாய் முதலீட்டில் 37,450 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கும் வகையில் 5 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை 2022 வெளியிட்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (23.8.2022) சென்னையில் தொழில் துறை சார்பில் நடைபெற்ற காலணிகள் மற்றும் தோல் துறை மாநாட்டில், 5 திட்டங்களின் மூலம் 2,250 கோடி ரூபாய் முதலீட்டில், 37,450 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடும் வகையில் தமிழ்நாடு அரசு மாநில பொருளாதாரத்தை வலுவடையச் செய்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கான 2030–31 ஆம் நிதியாண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சியடைய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதற்கு பின்பு, இதுவரை 192 ஒப்பந்தங்கள் மூலம் மொத்தம் 2 இலட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டு, சுமார் 3 இலட்சத்து 2 ஆயிரத்து 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு துறை வாரியான முதலீட்டு மாநாடுகளை மேற்கொண்டு, அத்துறைகளின் வாயிலாக முதலீடுகளை ஈர்த்து வருகிறது. அந்த வகையில், சென்னையில் இன்று காலணிகள் மற்றும் தோல் துறை மாநாடு நடைபெற்றது.

**<u>இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்</u>**

2,250 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 37,450 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 5 திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

அதன் விவரங்கள் பின்வருமாறு

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **உற்பத்திப் பொருள்** |
|---|---|---|
| 1. | கோத்தாரி – ஃபீனிக்ஸ் அக்கார்ட் லிமிடெட் | காலணி உற்பத்தி |
| 2. | கோத்தாரி – ஃபீனிக்ஸ் அக்கார்ட் லிமிடெட் | ஆயத்த நிலை மாதிரி சூழலமைப்பு |
| 3. | கோத்தாரி – SEMS குழுமம் | தோல் அல்லாத காலணி உற்பத்தி |
| 4. | வேகன் குழுமம் | தோல் அணிகலன் மற்றும் பரிசு அணிகலன்களின் உபகரணங்கள் உற்பத்தி |
| 5. | வாக்கரூ இண்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் | தோல் அல்லாத காலணி உற்பத்தி |

இத்திட்டங்கள், பெரம்பலூர் மற்றும் இராணிப்பேட்டை (பனப்பாக்கம்) மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

**<u>தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை, 2022</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஏப்ரல் மாதம், தொழில் துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், விரைவில் காலணித்துறை மற்றும் தோல் பொருட்கள் கொள்கை வெளியிடப்படும் என்று அறிவித்திருந்தார். அதன்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலணித்துறை மற்றும் தோல் பொருட்கள் துறையில், தமிழ்நாட்டின் பங்கினை மேலும் வலுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை 2022–யை வெளியிட்டார்.

துறைவாரியாக, ஆய்வுகள் மேற்கொண்டு அத்துறை வளர்ச்சியை சீரான முறையில் நெறிப்படுத்தும் வகையில், துறை சார்ந்த கொள்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையிலும், தோல் அல்லாத காலணிப் பொருட்கள் துறையில் முதலீடுகளை ஈர்த்திடவும், வேலைவாய்ப்புகளை பெருமளவில் உருவாக்கிடவும், ஏற்றுமதியைப் பன்மடங்கு பெருக்கிடும் வகையிலும் இக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**<u>காணொலிக் காட்சி வாயிலாக சர்வதேச காலணி உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்</u>**

இம்மாநாட்டில், சர்வதேச காலணி உற்பத்தியாளர்கள், காலணி உற்பத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் காணொலிக் காட்சி மூலமாக, தமிழ்நாட்டில் உள்ள சந்தை நிலவரங்களையும் அதன்மூலம் உருவாகும் முதலீடு வாய்ப்புகளையும் பற்றி உரையாடினார்கள். விவரங்கள் பின்வருமாறு:–

- திரு. ராகுல் வீரா, Sketchers நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய முதன்மை செயல் அலுவலர்.
- Ms. ஜேன் வில்சன், இங்கிலாந்து காலணி சங்கத்தின் முதன்மை அலுவலர்.
- திரு. ரோன் சாங் மற்றும் Ms. ஜென்னி சாங் எவர்வான் குழுமத்தின் தலைவர்கள்
- திரு. பாப் லாய்டு, வால்மார்ட் குழுமத்தின் இயக்குநர்
- Ms. ஜேன் சௌ, ஆல்டோ நிறுவனத்தின் இயக்குநர்
- திரு. கெண்ட், SEMS குழுமத்தின் பொது மேலாளர்

**<u>இம்மாநாட்டில் நேரடியாக பங்கேற்ற நிறுவனங்கள்</u>**

இந்திய சில்லறை விற்பனையாளர்கள் சங்கம் (Retailers Association of India – RAI) வாக்கரூ, விகேசி குழுமம், பாரகான், C&J க்ளார்க்ஸ் லிமிடெட், ஸ்கெச்சர்ஸ் இந்தியா, ப்யூமா இந்தியா, டைச்மேன், காதிம்ஸ், அஜியோ, ரிலையன்ஸ் ஃபுட்பிரிண்ட்ஸ், மெட்ரோ, எவர்வான், ஃபெங்டே, ஸ்ரீலெதர்ஸ், இந்தியன் டெர்ரைன், ஹாஸ்புரோ க்ளோத்திங் மற்றும் கோத்தாரி குழுமம் ஆகிய நிறுவனங்களில் இருந்து உயர் அதிகாரிகள் நேரடியாக பங்கேற்றனர்.

**இம்மாநாட்டில் காணொலிக் காட்சி வாயிலாக பங்கேற்ற நிறுவனங்கள்**

இங்கிலாந்து காலணி சங்கம், நைக் இந்தியா, கொலம்பியா ஸ்போர்ட்ஸ்வேர், நியூ பேலன்ஸ், காலரேஸ், கிக்கர்ஸ், பே ஹை, தைவான் ஆனிட்சுகா டைகர் மற்றும் SEMS குழுமம் ஆகிய நிறுவனங்களில் இருந்து உயர் அதிகாரிகள் காணொலிக் காட்சி வாயிலாக பங்கேற்றனர்.

இம்மாநாட்டில், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா. எழிலன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப, வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திருமதி. பூஜா குல்கர்ணி, இ.ஆ.ப., காலணி மேம்பாட்டு மன்றத்தின் தலைவர் திரு. ராஜ்குமார் குப்தா, க்ளார்க் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு. ஜொனாதன் ராம், தோல் ஏற்றுமதிக் கழகத்தின் செயல் இயக்குநர் திரு. ஆர். செல்வம், இ.ஆ.ப,, அயல் நாட்டுத் தூதர்கள் மற்றும் தூதரக அதிகாரிகள், தொழில் நிறுவனங்களின் / கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in